**செ. கு. எண்: 174** **நாள்: 11.10.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**

அவர்களின் அறிக்கை – **11.10.2018**

**தேனி மாவட்டம்,** பெரியகுளம் வட்டம், சோத்துப்பாறை நீர்த்தேக்கத்திலிருந்து 15.10.2018 முதல் 15.3.2019 முடிய உள்ள காலத்திற்கு பாசனத்திற்காகவும் மற்றும் பெரியகுளம் நகராட்சி குடிநீர் தேவைக்கும் சேர்த்து தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், சோத்துப்பாறை நீர்த்தேக்கத்தில் இருந்து முதல் போக சாகுபடி **1825 ஏக்கர் பழைய நன்செய்** நிலங்களுக்கும், **1040 ஏக்கர் புதிய புன்செய் நிலங்களுக்கும்** மற்றும் பெரியகுளம் நகராட்சி குடிநீர் தேவைக்கும் சேர்த்து **15.10.2018 முதல் 15.3.2019** வரை, முதல் 62 நாட்களுக்கு விநாடிக்கு 30 கனஅடி வீதமும், அடுத்த 31 நாட்களுக்கு விநாடிக்கு 27 கனஅடி வீதமும், கடைசி 59 நாட்களுக்கு விநாடிக்கு 25 கனஅடி வீதமும் மொத்தம் 360.46 மி.க.அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிடப்படும்.

இதனால் மொத்தம் **2865 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறுவதோடு, குடிநீர் தேவையும் பூர்த்தி செய்யப்படும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**